# BTA

BERGEN TAMILSK AVIS

49

April

2026

# தேன்தமிழிதழ்

















படங்கள்: தமயந்தி



# ஆசிரியம்!



**வணக்கம் உறவுகளே!**

நோர்வேயில் மே மாதம் என்பது மிகவும் அழகான மாதமாகும். சூரிய வெப்பம் கூடிவரும் மாதமாகும். இயற்கை துளிர்த்து மலர ஆரம்பிக்கிறது. மரங்கள் புதிய பச்சை நிறங்களால் பசுமையாக மாறுகின்றன.
பல்வகை அழகிய பூக்கள் பூத்து சூழலை அழகாக்குகின்றன. இது பருவ-கால மாற்றம் மட்டுமல்ல, எமது மனங்களிலும் ஒரு வகையான புதிய இதமான மாற்றம் ஏற்படுவதை நாம் உணர முடியும். நீண்ட குளிர் காலத்தில் முடங்கிக் கிடந்த மக்கள் முழுதாய் வெளியே வரத் தொடங்குவார்கள்.

வெளியரங்குகளில் ஒரு சமூகமாக இணையத் தொடங்குவார்கள். அதனை மே முதலாம் நாளான உழைப்பாளிகள் தினத்தன்று ஆரம்பித்து விடுவார்கள்.
அது மட்டுமல்லாது இந்நாடு பெற்ற விடுதலையை, சுதந்திரத்தை, அதனைப் பெற்றுத் தந்த தியாகிகளை நினைவு கூர்ந்து அரசியலமைப்பு நாளான மே 17 இனை பெரும் விழாவாக கொண்டாடுவார்கள்.

நோர்வே பெரும்பாலும் கிறிஸ்தவ மரபுகளை பின்பற்றும் கிறிஸ்தவ நாடாக இருப்பதால் ஏப்ரல், மே மாதத்தில் நிகழும் ஆன்மீக திருவருட்சாதனங்களான முதல் நன்மை, உறுதி பூசுதல் போன்றன நாடு பூராகவும் மிக சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

சமூகநலத் தொண்டர்கள், பணியாளர்கள் அனைவருமே நீண்ட நேரம் தம்மை பணிகளில் ஈடுபடுத்திக் கொள்வார்கள். இவர்களது நாட்டுப்பற்று, சமூகப்பற்று, இயற்கை நேசித்தல், சமூகத் தொண்டுகள் அனைத்தும் பல பாடங்களை கற்றுத் தருகிறது என்பதில் ஐயமில்லை. அவர்கள் சிறந்த நிர்வாகக் கட்டுக்கோப்புடன், தலைமைப் பணிவுடன், அமைப்புகளுக்கான சட்ட விதிகளுக்கு அமைய செயற்படுவதனை காண முடியும்.

இதே சமூகத்தில், இதே கலாசாரத்தில் எம்மை இணைத்து தமிழர்களாகிய நாமும் வாழ்ந்து வருகிறோம். புலம்பெயர்ந்து இங்கு வாழும் தமிழர்கள்,

தாம் வாழும் அனைத்து நாடுகளிலும் தமது கலை, கலாசாரம், பண்பாடு, விளையாட்டு, ஆன்மீகம் என தமக்கென அடையாளங்களை பேணிப் பாதுகாத்து முனைப்புடன் உழைத்து வருகிறார்கள் என்பது பெருமையே. இதற்காக சங்கங்கள், அமைப்புகள், இயக்கங்கள், விளையாட்டு கழகங்கள், தமிழ் ஆன்மீகப் பணியகங்கள் போன்றவற்றினை ஆரம்ப காலங்களில் இங்கு வந்த எம் முன்னோர்களே ஆரம்பித்து தந்துள்ளார்கள். ஆனால் அவை தற்காலத்தில் எவ்வாறு இயங்கி வருகின்றன என்பது நாம் அனைவருமே சிந்திக்க வேண்டிய பெரும் கேள்வியாகும்.

ஒவ்வொரு இடங்களிலும் ஒரு சங்கம் பல பாகங்களாகவும், ஒரு விளையாட்டு கழகம் பல கழகங்களாகவும், ஒரு தமிழ் பாடசாலை பல பாடசாலைகளாகவும், ஒரு கோவில் பல கோவில்களாகவும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இதற்கான அடிப்படைக் காரணி தமிழர்களின் சந்ததி பெருகி வருகின்றமை என அழகாக கூறிவிட்டு கடந்து போய்விட முடியாது. தமிழர்கள் மத்தியில் ஒற்றுமையின்மையே முதன்மை காரணி ஆகும். குறிப்பிட்டுச் சொல்வதானால் ஒருவரின் கருத்து அல்லது ஆலோசனை ஒரு சங்கத்தில் எடுபடாவிட்டால், அவர் புதிய சங்கம் ஒன்றினை ஆரம்பித்து அச்சமுக மக்களை பிரித்து, உடனே தமிழ் கலாசார விழா மட்டுமல்ல ஆன்மிக விழாவே தனியாக நடத்தி முடிப்பர்.

'இவ்விழாவில் கிடைக்கும் பணம் நாட்டில் வறுமையில் வாடும் மக்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனும் வரிகள் தவறாது கடும் நிறத்தில் அச்சடித்து மக்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.' அதுவே அவர்களுக்கு நற்பெயரையும், சமூக அந்தஸ்த்தையும் கொடுத்துவிடும். ஆனால் இங்கு ஊர் இரண்டு படுவது ஒரு விடயமே இல்லை. இந்த துணிச்சலும், வீரமும் தமிழர்களிடம் மட்டுமே உறைந்து கிடக்கிறது.

நோர்வே போன்ற பண்பான நாடுகளில் வாழ்ந்து வரும் நாம், இந்நாட்டு கலாசாரத்தில் உள்ள நற்பண்புகளை கற்றுக்கொண்டு செயற்படுவோமெனில் மனங்களிலும், நமது செயல்களிலும் நல்ல மாற்றங்கள் உருவாகும்.

தேன் தமிழிதழ்
Ansvarlig redaktør: **Julius Antoni**
ஆசிரியர்: **யூலியஸ் அன்ரனி**
தொலைபேசி எண்: (47) 924 63 674

BTA
BERGEN TAMILSK AVIS

**Vipps 729129, eller**
**bank konto: 3626 31 78585**









**2026** ஏப்ரல் 18 முதல் 24 வரை "One Ocean Week (ஒரு பெருங்கடல் வாரம்)" நோர்வே பேர்கனில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. பேர்கன் வளர்ச்சியில் பெருங்கடலின் பங்கை முன்னிலைப்படுத்த ஆராய்ச்சிகள் மாநாடுகள், கல்வி, வணிகம், பொதுத்துறை மற்றும் பொதுச் சமூகம் போன்றவற்றுக்கான பங்கேற்பாளர்களை ஒன்றிணைக்கும் முகமாக முன்னெடுக்கப் பட்டது.

பேர்கன் நகரம் எதற்காக சிறப்பு மிக்க கடல் நகராக விளங்குகிறது?, அதிலும் நோர்வையின் பெருங்கடல் தலை-நகரமாக விளங்குகிறது, என்பதனை விளக்கும்வகையிலும், நிரூபிக்கும் வகையிலும் இந்த வார நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நாட்களில் 200க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் பேர்கனின் தரையிலும், கடலிலும் நடைபெற்றன. தொழில் வல்லுநர்கள் மற்றும் பொது மக்களுக்கான மாநாடுகள், விரிவுரைகள், கண்காட்சிகள், பாய்மரப் படகுப் பயிற்சிகள், கடல் படகு ஓட்டங்கள் என பல்வேறு நிகழ்வுகள் நடந்தன.

குறிப்பாக கடற் தொழில்கள், காலநிலை, அரசியல், நிதி, தொழில்நுட்பம், திட்டமிடல், உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் போன்றன முன்னிலைப் படுத்தப்பட்டன. பேர்கன் நகராட்சி, Vestland மாவட்ட நகராட்சி, பேர்கன் பல்கலைக் கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

தொடக்க நாளான ஏப்ரல் 18ம் நாளன்று Statsraad Lehmkuhl

எனும் பாய்மரக் கப்பல், 12 மாதங்களின் பின்னர் தொடக்க நாளான ஏப்ரல் பதினெட்டாம் நாளன்று Statsraad Lehmkuhl எனும் மூன்றுபாய்மரக் கப்பல் 12 மாதங்களின் பின்னர் பேர்கன் நகரை வந்தடைந்தது. இக்கப்பலை வரவேற்க பேர்கன் நகரில் உள்ள அனைத்து கடற்படகுகளையும் ஒன்று கூடும்படி நகர சபை அறிவித்து, ஏராளமான படகுகள் பேர்கன் கடலில் Statsraad Lehmkuhl எனும் மூன்றுபாய்மரங்களைப் பொருத்திய கப்பலினை வரவேற்று அழகுபடுத்திய காட்சி கண்களையும், மனதையும் கவர்ந்தது.

ஏப்ரல் 20ம் நாளன்று நகரின் பிரதான மண்டபமான Haakonshallen இனில் சர்வதேச உச்சி மாநாடு “ஒரு பாதுகாப்பான மற்றும் கணிக்கப்பட்ட பெருங்கடல் (A Safe and Predicted)” எனும் கருப்பொருளில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நோர்வே நாட்டின் இளவரசர் Haakon பங்கு பற்றி சிறப்பித்தார். மற்றும், இலங்கையின் கடற்தொழில், நீரியல், கடல்வள அமைச்சரான இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களும், கடல்வள செயற்குழு அலுவலர்கள் இருவரும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் உறுப்பினரான இராமலிங்கம் சந்திரசேகர் அவர்கள் இலங்கை குடியரசு தலைவர் அனுரகுமார திசநாயக்காவின் அரசவையில் அமைச்சராக பணியாற்றி வருகின்றார்.




“இந்த நோர்வே வருகையின் காரணம் என்ன?” என தேன் தமிழிதழ் அமைச்சரை வினவிய போது “Fisheries சம்பந்தமாக One Ocean Week நடைபெறுகிறது, அதில் பங்குபெற்றுவதற்காக அழைப்பு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இங்கு வருகை தந்து நிகழ்வுகளிலே பங்கு பெறுவதும், இங்குள்ள பல்கலைக்கழகம் மற்றும் தமிழ் மக்களையும் சந்திப்பதே எமது பயணத்தின் நோக்கமாகும்” என அவர் கூறினார்.

எமது தேன் தமிழிதழ் இலங்கையின் தமிழ் பிரதேச கடற் பகுதிகளின் மாசடைவு, உயிரின அழிப்பு, பாதுகாப்பு தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டும் பல்வேறு ஆக்க பூர்வமான தரமான கட்டுரைகள், கவிதைகளை பதிவிட்டு வருகிறோம். அவற்றினைக் கடல்வள அமைச்சர்கள், அதிகாரிகள் பார்வையிட்டாலே நாட்டுக்கும், சூழவுள்ள கடற் பிரதேசங்களுக்கும் நலமாகும்.

படங்கள்: யூலியஸ் அன்ரனி

## சட்ட சீர்திருத்தங்களின் இன்றியமையாத் தேவை...

-M. A. Yaseer Arafath-



போதைப்பொருள் கடத்திய 22 மதகுருக்கள் இரத்த மாதிரி பரிசோதனைகளில் 19பேர் போதைப்பொருள் பாவித்து இருக்கின்றமை பிடிபட்டுள்ளது.

இதோடு தொடர்புடைய பிரதான சூத்திரதாரி காலியைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் நபர் என்றும் பரப்புரைகள் அதி தீவிர வெறுப்பு குழுக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வு மூன்று பிரதான பௌத்த பீடங்களையும் அதிர வைத்துள்ளது. ஜனாதிபதியுடன் கூடிய அவசர கூட்டத்தில் “சங்காதிகரண” எனப்படும் துறவிகளுக்கான நீதிமன்றம் அமைக்கவும் அதன் தீர்ப்புகளை அரசு அமுல்படுத்தவும் விஹார தேவாலகம சட்டத்தை மறுசீரமைப்பு செய்யவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இவற்றை மகாசங்கத்தின் ஒத்துழைப்புடன் விரைவில் மேற்கொள்வதற்கு இணங்கியுள்ளார். இது பல நூற்றாண்டுகளாக இந்த சட்டங்கள் சீர்திருத்த படவில்லை இப்போதுதான் அரசை கைவைக்க மூன்று நிகாயக்களும் ஒருமித்த குரலில் ஜனாதிபதியிடம் தாமாக முன்வந்து இந்த கோரிக்கையை முன்வைத்து இருக்கிறார்கள்.

இதோடு சேர்ந்த இலங்கையில் மதநிந்தனை மற்றும் வெறுப்பு பேச்சு ஏனைய மதங்களை இனங்களை தாக்கி பேசுதல் வெறுப்பு பேச்சு எழுத்து கருத்து ஆக்கம் மற்றும் குற்றங்கள் அனைத்துக்கும் எதிரான நீண்ட கால சமாதானம் பொருளாதார அபிவிருத்தியை இலக்கு வைத்து உருவாக்க வேண்டும்.

# உக்ரைனும் நோர்வேயும் இணைந்து DRONE உற்பத்தியில் ஈடுபட உள்ளனர்



யூலியஸ் அன்ரனி

உக்ரேனிய அதிபர் Volodymyr Zelenskyj கடந்த 14.04.2026 அன்று ஒஸ்லோ நகருக்கு வருகை தந்தார். உக்ரைனுக்கும் நோர்வேக்கும் இடையிலான தொழில்துறை ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்திலும் இரு நாட்டு அதிபர்களும் கையெழுத்திட்டனர். இதில், உக்ரைனுக்கான ட்ரோன் உற்பத்தியை ஆதரிப்பதாக நோர்வே உறுதியளித்துள்ளது. பதிலுக்கு, உக்ரைன் தான் எதிர்கொள்ளும் போர் அனுபவங்களையும், சவால்களையும், தற்பாதுகாப்பு முறைமைகளையும், அவை தொடர்பான அறிவையும் நோர்வேயுடன் பகிர்ந்து கொள்ளுவதாக உறுதியளித்துள்ளது.

நோர்வே உக்ரைனின் ஒரு ஆழமான ஆதரவாளர்தான், அதேவேளை ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிரான இந்தக் கடுமையான போராட்ட அனுபவங்களை உக்ரைன் பகிர்ந்து கொள்கிறது என Jonas Gahr Støre (Ap) தெரிவித்துள்ளார்.

"ட்ரோன்களுக்கு எதிராகத் தற்காத்துக்கொள்வதில் உலகில் உக்ரேனை விட சிறந்த நாடு எதுவும் இல்லை. அவர்கள் சமீபத்தில் மத்திய கிழக்கில் தங்கள் சேவைகளை வழங்க முன்வந்தனர். அதே சேவைகளை நோர்வேக்கும் வழங்குகிறார்கள்" என நோர்வேயின் பாதுகாப்பு அமைச்சர் Tore O. Sandvik கூறினார்.

Volodymyr Zelenskyj ஜெர்மனியிலிருந்து தான் நோர்வே வந்தடைந்தார். அங்கு அவர் ஜெர்மனியின் கூட்டாட்சி அதிபர் Friedrich Merz இனை சந்தித்தார். இருவரும் பாதுகாப்பு ஒத்துழைப்பும் குறிப்பாக வான் பாதுகாப்பு மற்றும் ட்ரோன் தொழில்நுட்பம் தொடர்பான ஒரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டனர்.

ஜெர்மனி உக்ரேனின் ட்ரோன் தொழில்துறைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் ஒரு கூட்டு அறிக்கை கூறுகிறது. கூடுதலாக, ட்ரோன்களின் கூட்டு உற்பத்திக்காக புதிய நிறுவனங்கள் அங்கு நிறுவப்படுகிறது.

ட்ரோன்கள் விடயத்தில் நோர்வே ஏற்கனவே உக்ரைன் மற்றும் ஜெர்மனியுடன் ஒத்துழைத்துவருவதாக நோர்வேயின் பிரதமர் Jonas Gahr Støre தெரிவித்தார்.

2023 ஆகஸ்டில் உக்ரைனுக்கு F-16 ரக விமானங்களை நோர்வே வழங்கும் என பிரதமர் Jonas Gahr Støre உறுதியளிதமை தெரிந்ததே. ஆனால் இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாகியும், அந்த ஆறு போர் விமானங்களில் ஒன்றுகூட உக்ரைன் போருக்குச் செல்லவில்லை. கடந்த வாரம், அந்த விமானங்கள் பெல்ஜியத்தில் உள்ள ஒரு பட்டறையில் இருப்பதாக நோர்வே செய்தி ஊடகமான NRK வெளிப்படுத்தி உள்ளது.

உக்ரைனுக்கு வழங்கப்பட்ட நான்கு F-16 விமானங்கள் நோர்வேயிலிருந்து புறப்பட்டபோது, அவற்றால் தானாகப் பறக்க முடியவில்லை. அவை பெட்டிகளில் பாகங்களாக அனுப்பப்பட்டன. இந்த நான்கு விமானங்களும், பயிற்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட இரண்டு விமானங்களும் இப்போது சுமார் ஒரு வருடமாக பெல்ஜியத்தில் உள்ள சபேனா பட்டறையில் உள்ளன.

நோர்வேயிடமிருந்து தாங்கள் பெறும் விமானங்கள் செயல்பாட்டு நிலையில் இல்லை என்பதை உக்ரைனியர்கள் அறிந்திருந்தனர் என்று Zelenskyj கூறினார்.

பெல்ஜியத்தில் ஒரு தொழில்முறை சமூகம் உள்ளது, அது உக்ரைனுக்காகப் பணியாற்றக்கூடிய விமானங்களை உருவாக்கி வருகிறது என Jonas Gahr Støre மேலும் தெரிவித்தார். உக்ரைனுக்கான நோர்வேயின் உதவியான Nansen திட்டம், கடந்த ஆண்டு 85பில்லியன் குரோனராக அதிகரிக்கப்பட்டது.
இதில் 70பில்லியன் இராணுவதிட்டத்துக்கும், 15பில்லியன் குடிமக்கள் மற்றும் மனிதாபிமான ஆதரவிற்கும் பயன்படுத்தப் படுகிறது.



# நோர்வேயில் 70 ஆண்டுகள்

நோர்வேயில் தமிழ் புலம்பெயர்வு வரலாற்றின் 70 ஆண்டுகளை (1956-2026) நாம் அடையாளப்படுத்தி, கொண்டாடுவோம்.
ஏனெனில் இது நோர்வேயின் வரலாற்றின் ஒரு பகுதியாகும்!
இந்த தேசியமட்டத்திலான மக்கள் கோண்டாட்டத்தில் நீங்களும் பங்கெடுத்து கலந்துகொள்ளுங்கள்!

நோர்வேயில் 70 ஆண்டுகள்! நோர்வேயிய தமிழர்கள் கொண்டாடுகிறார்கள்!

வெளியரங்குகளிலும் உள்ளரங்குகளிலும் நிகழ்வுகள்.
ஒரு ஆரம்பமாக 8 மாவட்டங்களில் 17 கண்காட்சிக் காலப்பகுதிகளும் 9 நிகழ்வுகளும்.

Linderud senter இல் உள்ள டுனைெநசரனளவரய இல் ஒரு கண்காட்சிக் காலப்பகுதியுடன் இந்தக் கொண்டாட்டம் ஆரம்பமாகின்றது.
காலம்: 01.05.2026-01.06.2026
கண்காட்சி:
Kvinner tar grep (பெண்களின் தீர்மானம்)
Eventyr er kultur - Barn forteller (கதைகள் ஒரு பண்பாடு - கதை கூறும் சிறுவர்)
Historien om tamiler i Norge (நோர்வே வாழ் தமிழர் வரலாறு)

தனிநபர்கள் மற்றும் அமைப்புகள்/நிறுவனங்களுடன் இணைந்து புலம்பெயர் தமிழ் சுவடிகள் காப்பகங்கள்.

வரைகலை: ஈஸ்வரன் அருள்குமார்

வெளியரங்குகளிலும் உள்ளரங்குகளிலும் நடக்கும் நிகழ்வுகள் பற்றி மேலதிகத் தகவல்கள்:
https://diasporatamil.no/70-ar-i-norge-1956-2026-norsk-tamiler-feirer/

70வது ஆண்டு நிறைவு குறித்தும், நீங்கள் எவ்வாறு பங்களிக்கலாம் என்பது பற்றியும் நோர்வேயிய மொழியில் மேலதிகத் தகவல்:
https://diasporatamil.no/70ar-med-tamilsk-migrasjon-til-norge/

70வது ஆண்டு நிறைவு குறித்தும், நீங்கள் எவ்வாறு பங்களிக்கலாம் என்பது பற்றியும் தமிழ் மொழியில் மேலதிகத் தகவல்:
https://diasporatamil.no/70-aar-med-tamisk-migrasjon-til-norge-tamil/

Med vennlig hilsen,
Baheerathy Kumarendiran
På vegne av | on behalf of | சார்பில்
70-årsjubilumskomiteen
70வது ஆண்டு நிறைவு குழு

Diaspora Tamil Archives
புலம்பெயர் சுவடிகள் காப்பகங்கள்
www.diasporatamil.no




2026

# நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம்

A.M.Stephen C.R (யாழ் அருள் ஆச்சிரமம்)

உலக நாடுகள் அனைத்திலும் விளையாட்டுகளும், விளையாட்டுப் போட்டிகளும் மிகவும் ஆர்வத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன. விளையாட்டு உடலுக்கும், மனதிற்கும் புத்துணர்வு அளித்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க உதவும் மிகச்சிறந்த வழிமுறை ஆகும். இது ஒழுக்கம், குழுப்பணிகள், தலைமைத்துவம் மற்றும் வெற்றி தோல்விகளை சமமாக ஏற்கும் பண்புகளை வளர்கிறது. உள்ளூர் போட்டிகள் முதல் உலகக்கோப்பை வரை இது மிகவும் விறுவிறுப்பாக நடத்தப்படுகிறது.

எல்லா விளையாட்டுக்களிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்று போட்டிகள் நடைபெற்று சிறந்த வீரர்கள், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு உயரிய பரிசில்கள் வழங்கப்பட்டு பாராட்டுகளும் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு மனிதருக்கும் விளையாட்டு அவர்களின் வாழ்விலும் வெற்றி பெறுவதற்கு தேவையாக உள்ளது. விளையாட்டு வீரர்கள் பல பொழுதும் தம் வாழ்வில் தோற்பது அரிது, வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைகளிலும் அவர்களின் இளமைக்கால விளையாட்டுக்கள், அவர்கள் உணரா--மலே அவர்களின் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண வைத்து வாழ்வில் முன்னேற்றம் காண வைக்கிறது. மேலும் அவர்களின் உடல் உறுப்புகள் வலிமை பெற்று, வயது முதிர்ந்த காலங்களிலும் உற்சாகமாக செயல்பட வைக்கிறது. எண்ணற்ற விளையாட்டுக்கள் இன்றைய உலக நாடுகளில் பின்பற்றப்படுகின்றன. அவைகளில் முக்கியமானதாக பல நாடுகளிலும் உதைப்பந்தாட்டம் திகழ்கின்றது. இன்று அதிக பார்வையாளர்களான ரசிகர்களைக் கொண்டதும் அதிக நாடுகள் பங்கு கொள்வதும் உதைப்பந்தாட்ட போட்டிக்களிலே என்றால் அது மிகையாகாது.

உலகில் உதைப்பந்தாட்டம்(கால்பந்து) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பழமையான வரலாற்றைக் கொண்டதாக, விளையாட்டுகள் பற்றிய வரலாற்றில் கூறப்படுகிறது. பண்டைய சீனா, ஜப்பான், கிரேக்க, ரோமானிய நாடுகளில் பந்தை காலால் உதைத்து விளையாடும் முறை கிறிஸ்துவுக்கு முன் இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளிலேயே இருந்துள்ளது என்பது வரலாறு. நவீன உதைப்பந்தாட்டம் 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் முறைப்படுத்தப்பட்டு 1868 இல் கால்பந்து சங்கம் விதிகளை உருவாக்கியதன் மூலம் உலகப் பிரபலம் அடைந்தது. 1924ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்தாட்டத்தை நிர்வகிப்பதற்கு சர்வதேச உதைப்பந்தாட்ட சம்மேளமும் தொடங்கப்பட்டது. இது விளையாட்டின் உலகளாவிய அமைப்பாக செயல்படுகிறது.






Paris 1924 OG, Football – The team from Uruguay (URU) 1st

19ஆம் நூற்றாண்டில் ஒலிம்பிக் போட்டியும், 1930 முதல் உலகக்கோப்பை போட்டிகளும் நடத்தப்பட்டன. இலங்கையில் உதைப்பந்தாட்டம் 1850ம் ஆண்டளவில் பிரித்தானியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1900ஆம் ஆண்டு அளவில் உள்ளூர் இளைஞர்களிடையே குறிப்பாக தென்பகுதிகளில் பிரபல்யமடைந்தது. இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனமும் 1939இல் நிறுவப்பட்டது. 1952 முதல் இலங்கையில் சர்வதேச உதைப்பந்தாட்ட சம்மேளனமும் சம்மேளனத்தின் அங்கீகாரம் பெற்று, கொழும்பு சுகதராச மைதானத்தை மையமாகக் கொண்டு செயல்பட ஆரம்பித்தது.

இது முதல் மாவட்டங்களுக்கு இடையிலான போட்டிகள் மற்றும் சர்வதேச போட்டிகள் ஆரம்பமாகி கொழும்பில் சென் மைக்கேல், சவுண்டர்ஸ் கழகம் மற்றும் ஜாவா லெனின் கழகம் போன்ற கழகங்கள் சிறப்பான அணி-களாக முக்கியத்துவம் பெற்றன.

**ST.MARY'S SC**
St.Mary's Sports Club Jaffna

தெடர்ந்து இலங்கையில் உதைப்பந்தாட்டம் தற்போது மாவட்ட ரீதியாக கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் பல மாவட்டங்களிலும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

நாவாந்துறை சென்மேரிஸ் கழகமானது 1936இல் ஆரம்பிக்கப்பட்டு அரச அனுசரணையையும் பெற்ற கழக-மாகும். அன்றிலிருந்து உதைப்பந்தாட்டத்திலும் இன்னும் பல விளையாட்டுகளிலும் தீவிர பங்கேற்று சமூக, சமய, கலை, கல்வி, உழைப்பு, விளையாட்டு போன்ற பல நிலைகளிலும் முன்னேறி வருகின்றது. குறிப்பாக விளையாட்டு துறையில் உதைப்பந்தாட்டத்தில் சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருமே அதிக ஆர்வம் கொண்டவர்களாக திகழ்கின்றனர்.

1936 இலிருந்து நாவாந்துறை சென்மேரிஸ் கழகத்தில் விளையாடி வருகின்ற அனைவருமே ஒவ்வொரு காலகட்டத்திலும் உயிரைக் கொடுத்து விளையாடுவது என்ற கோட்பாட்டில் மிகமிக ஆர்வத்துடன் விளை--யாடி வந்தனர். ஆரம்ப காலங்களிலிருந்து அந்த வீர உணர்வுடன் அம்முன்னோர் விளையாடி காட்டினர். அதன் விளைவாகவே இன்று நாடளவில் பெரும் சாதனை புரிந்துள்ளனர்.




இலங்கை உதைப்பந்தாட்ட வரலாற்றில் 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான்காம் தேதி (04.04.2026) நடைபெற்ற சாம்பியன் கிண்ணத் தொடரில் நாவாந்துறை சென்மேரிஸ் அணி, இதன் அணித் தலைவர் நிதர்சன் மரியதாஸ் அவர்களின் தலைமையில் முதன்முறையாக நாடு தழுவிய ரீதியில் சம்பியன் பட்டம் வென்று வெற்றிக் கிண்ணத்தை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கொழும்பு குதிரை பந்தய திடலில் 04.04. 2026 இல் நடைபெற்ற இறுதிப்போட்டியில் பலம் வாய்ந்த கொழும்பு அணியை 3 - 1 கோள்களால் வீழ்த்தி, இத்தொடரில் வெட்டி வாகை சூடிக்கொண்டனர். இதன் வழியாக தற்போது இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் பகுதிகளில் இருந்து சம்பியன் வெற்றிவாகை சூடிய முதல் அணி என்ற பெருமையை நாவாந்துறை சென்மேரிஸ் கழகம் பெற்றுள்ளது.

இந்த வேளையில் நாவாந்துறை சென்மேரிஸ் அணி வெற்றி கொண்ட சவுண்டர்ஸ் உதைப்பந்தாட்ட அணி பற்றியும் நாம் அறிந்து கொள்வது மிகவும் நன்று.

ஏனெனில் அப்போதுதான் நாவாந்துறை சென்மேரிஸ் அணி இலங்கையிலே எவ்வளவு மேலான வலிமை படைத்த அணியை வென்றுள்ளது என்ற மேன்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம். Sounders என்ற உதைப்பந்தாட்ட கழகம் இலங்கையின் கொழும்பை தளமாகக் கொண்ட மிக நீண்ட வரலாற்றையும், பெருமையையும் கொண்ட ஒரு புகழ்பெற்ற உதைப்பந்தாட்ட அணியாகும். இலங்கையின் உதைப்பந்தாட்ட வரலாற்றில் நூறு வருடங்களுக்கும் மேலாக அதிக கிண்ணங்களை கைப்பற்றிய பெருமைக்குரிய அணியாக இவ்வணி திகழ்கிறது.




“டயலாக் சாம்பியன் லீக்” போன்ற தேசிய அளவிலான முக்கிய போட்டி தொடர்களில் பலமுறை வெற்றியீட்டியுள்ளது. இது இலங்கையின் கால்பந்தாட்டத்தில் மிகப்பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

இலங்கை கால்பந்தாட்ட வளர்ச்சிக்கு தொடர்ச்சியாக பங்காற்றி வரும் ஒரு முன்னணி கழகமாகும். இலங்கை தேசிய அணிக்கு சவுண்டஸ் கழகமானது இதுவரை பல விளையாட்டு வீரர்களை உருவாக்கிக் கொடுத்துள்ளது.

இந்த விளையாட்டு கழகத்தையே சம்பியன் லீக் இறுதிப் போட்டியில் தோற்கடித்து நாவாந்துறை சென்மேரிஸ் அணி இலங்கையின் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது. இது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

■

# இனியாவது விட்டுவிடுவார்கள்

-நெற்கொழு தாசன்-

குரல் எழாத
அந்திமப்பொழுதில் எண்ணியிருக்கக்கூடும்
நிணம் ஊறிய மண்ணில்
உடலைத் தின்றவர்கள் முன்னிருந்து.

அவர்களின்
திசைகள் கிழிந்த ஓலம்
நெடிய இரவின் ஊளை
கைவிடப்பட்ட சொற்கள்
பிளந்த உடல்களிலிருந்த வாடைகள்
சலனமற்று அந்தரித்துவிழுந்த இறுதிமூச்சுகள்
நிலப்படிவுகளிலிருந்து மேல் வருகின்றன.

பாடசாலை உடையிலிருந்தவர்கள்
நகர் புகும் தேவையிலிருந்தவர்கள்
வீடுகளை நினைவில் சுமந்து திரும்பியவர்கள்
மகளைத் தேடிவந்த தந்தை
மகவைக் கைவிடாத தாய்
யார் இவர்கள்?

நாங்கள் எலும்புக்கூடுகளை
எண்ணி அடையாளமிடுகிறோம்.

உப்புக் காற்றும்
தரவைப் பறவைகளும்
நீள்நெருஞ்சி கொடிகளும் அன்றுமிருந்திருக்கும்.

குருளைக் கற்களும்
பரந்த வெளியின் கூதலும்
முதுமரங்களும் அன்றுமிருந்திருக்கும்.
கற்றையிருளும் நட்சத்திரங்களும்
பற்றுத்துறந்தவனுக்கு அமைத்த பீடங்களும்
பிரித் ஓதல்களும் அன்றுமிருந்திருக்கும்.
இருந்துமென்ன,
எங்களுக்கு சொல்வதற்கு சாட்சியமுமில்லை
கிடைப்பதற்கெனவொரு நீதியுமில்லை
திரும்பிப் பார்ப்பதற்கு உலகமுமில்லை
சொல்லிக் கேட்பதற்கு மனிதர்களுமில்லை
முதுகிழவியின் தமிழ்ப்பிள்ளைகளுமில்லை
இங்கோர் அதிசயமும் நிகழ்ந்துவிடப்போவதில்லை

புதைமேடுகளில்
குருதியோடிய இடங்களில்
கதறியழுத வெளிகளில்
அநாதரவாக்கப்பட்ட பிணங்களில்
இருளின் முகத்தோடு
ஒருக்களித்துக் காத்திருக்கின்ற சாக்குருவியும்
ஒப்புக்கொடுத்த பிள்ளையைத்தேடி
வாதைகளில் அறையப்பட்டு
மரித்தும் உயிர்த்தும் அழியாத் துயரில்
செத்ததன்னுடல் சுமந்தலைகின்ற முதுதமிழ்த்தாயும்
தேசவரைபடத்தின்
இருதுருவக் குறிகாட்டிகளாகயிருக்கும்வரை

வாழ்வென்பது
இன்நிலத்தில் பாழ்




# Solo traveller
# நாஜி நௌஷி
## எல்லைகளை கடந்த துணிச்சலான பிரயாணி

-Mhmd Nawshad-

இன்றைய காலத்தில் பெண்கள் பல துறைகளில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அதில் தனிப்பட்ட முறையில் உலகைச் சுற்றிப்பார்க்கும் பயணிகளது(solo travelers) இடமும் முக்கியமானது. அப்படிப்பட்ட துணிச்சலான இந்தியப் பெண்களில் ஒரு தனி இடம் நாஜி நௌஷிக்கு உண்டு.

நாஜி நௌஷி கேரளாவின் கன்னூரை பிறப்பிடமாகக் கொண்டவர். தன்னுடைய 12 வயது முதலே அப்பாவின் உள்ளூர் பயண அனுபவங்களைக் கண்டும் கேட்டும் வளர்ந்த நௌஷி எதிர்காலத்தில் தானும் இந்தியாவை சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஒரு ஆசையை வளர்த்துக் கொண்டாள்.

ஏனைய குழந்தைகள் விளையாட்டுப் பொருட்களை வைத்து விளையாடும் காலத்தில் அவளோ உலக வரை படத்தை வைத்துக் கொண்டு பயணம் செய்வதாக கற்பனையில் விளையாடினாள்.

ஆனால் ஒரு நடுத்தரக்குடும்பப் பெண்ணுக்கு அது எல்லாம் கற்பனையில் மட்டும்தான் சாத்தியம். நாஜி அன்றைய சமூக நடைமுறைப்படி தன்னுடைய 18ஆவது வயதிலேயே திருமணமும் முடித்தார்.

அடுத்து என்ன? குழந்தைகள் தான். ஒன்றல்ல இரண்டல்ல 5 குழந்தைகளை அடுத்தடுத்து பெற்று வளர்க்கிறாள். ஆனாலும் தன்னுடைய பிரயாணக் கனவு மட்டும் தன்னை விட்டுப் போகவில்லை. தன்னுடைய நீண்ட நாள் ஆசையை கணவன் நவ்ஷாட்டிடம் தெரிவிக்கிறாள். கணவனும் அவளின் ஆசையை புரிந்துகொண்டு முதலில் முறையாக வாகனம் ஓட்டக் கற்றுக் கொடுக்கிறார். சொந்தமாக ஒரு வண்டியும் வாங்கி கொடுக்கிறார். இனியென்ன பயணம் தான்.

2020ஆம் ஆண்டு முழுக் கேரளாவையும் சுற்றி (500கி.மீ) வந்தார். அப்போது குடும்பமும் ஊரவரும் கொடுத்த உற்சாகத்தில் அடுத்து முழு நாட்டையும் சுற்றிப் பார்க்க ஆசைப் பட்டார்.



ஆனால் ஒரு பெண் தனியாக பல்லாயிரம் கிலோமீட்டர்கள் எப்படி சாத்தியமென யோசித்தார் ஆனால் முயற்சியை கைவிடவில்லை.
2021ஆம் ஆண்டு வெள்ளோட்டமாக தன்னுடைய இரு தோழிகளுடன் லடாக் வரை பயணம் செய்தார். அதே ஆண்டு மீண்டும் தனியாக முழு இந்தியாவையும் சுற்றி வந்தார் (16000கி.மீ)

அதே ஆண்டு மீண்டும் லக்ஷதத்தீவுகளுக்கு சாலைவழியாக பயனித்தார். ஆனாலும் அவருடைய ஆசை தீரவில்லை. இந்தியாவின் மிகக் கடுமையான பயணமான everest base camp தான் நௌஷியின் அடுத்த லட்சியம்.

Everest Base Camp (EBC) பயணம் உலகத்தில் மிகவும் சவாலான டிரெக்கிங் அனுபவங்களில் ஒன்று.

**இதற்கு முக்கிய காரணங்கள்:**

1. ஆக்ஸிஜன் குறைவு (High Altitude) EBC சுமார் 5,364 மீட்டர் உயரத்தில் உள்ளது. இந்த உயரத்தில் காற்றில் ஆக்ஸிஜன் குறைவாக இருக்கும். இதனால் தலைவலி, வாந்தி, சோர்வு போன்ற Altitude Sickness ஏற்படலாம்.
2. நீண்ட நாட்கள் நடைப்பயணம் இந்த பயணம் பொதுவாக 10-14 நாட்கள் ஆகும். தினமும் 5-8 மணிநேரம் நடைப்பயணம் செய்ய வேண்டி வரும்.



3. கடும் குளிர். இரவு நேரங்களில் வெப்பநிலை -10°C அல்லது அதற்கு குறைவாக போகும். சரியான உடைகள் இல்லையெனில் கடினமாகிவிடும்.
4. கடினமான பாதைகள். பாறைகள், ஏற்றங்கள், இறக்கங்கள் நிறைந்த பாதைகள். சில இடங்களில் மிகவும் மெல்லிய பாலங்கள் (suspension bridges) கூட இருக்கும்.
5. வசதிகள் குறைவு. பயணத்தின் போது ஹோட்டல்கள் அல்லது வசதிகளுள்ள தங்குமிடங்கள் மிகக் குறைவு. அடிப்படை lodging (tea houses) மட்டுமே கிடைக்கும்.
6. மனதளவிலான சவால். தொடர்ந்து களைப்பு, குளிர், ஆக்ஸிஜன் குறைவு - இவை மனதையும் சோதிக்கும்.
7. வானிலை மாறுபாடு. மலைப்பகுதியில் வானிலை திடீரென மாறும். பனி, மழை, காற்று - எதுவும் எதிர்பாராமல் வரலாம். அதனால் தான், Everest Base Camp பயணம் உடல் மற்றும் மன உறுதி இரண்டையும் சோதிக்கும் ஒரு பெரிய சவால் என்று சொல்லப்படுகிறது.

நாஜி நவ்ஷி EBC ஏற்பாட்டுக்குழுவிடம் தன்னையும் பயணத்தில் இணைத்துக்கொள்ளக் கேட்டபோது EBC ஏற்பாட்டுக் குழு கேலி செய்தார்கள். இது போன்ற ஒரு கடினமான trackingக்கு உடல் ஆரோக்கியமும் பயிற்ச்சியும் வேண்டுமென்றார்கள்.

நான் 5குழந்தைகள் பெற்று வளர்த்தேத்திருக்கிறேன் இதை விட என் ஆரோக்கியத்துக்கு வேறு என்ன சான்றுதல் வேண்டுமென்று EBC ஏற்பாட்டுக்குழுவுடன் மன்றாடினார். அதை வெறும் 6நாட்களில் நிருபித்தும் காட்டினார்.

ஆம் பொதுவாக everest base camp tracking ஐ பூர்த்தி செய்ய குறைந்தது 14நாட்கள் எடுக்கும். ஆனால் நாஜி நவ்ஷி வெறும் 6நாட்களில் EBC ஐ அடைந்தார்.

ஆசை தீர இந்தியாவையே தனியாகச் சுற்றியாயிற்று இனியென்ன? 2022ஆம் ஆண்டு கணவனுடைய தொழில் காரணங்களுக்காக குடும்பத்துடன் ஓமானில் குடியேற அங்கும் அவருடைய பயணமோகம் அவரை விடவில்லை.

அது "Qatar FIFA" உலக கோப்பைக்கு தயாராகிக் கொண்டிருந்த காலம். இருக்கவே இருக்கிறது தன்னுடன் எப்போதும் துணையாக பயணிக்கும் Mahindra Thar வண்டி!! ஆம் இந்தியாவை விட்டு வரும்போது தன்னுடைய வண்டியையும் கொண்டு வந்திருந்தார். இந்தியா உலகக் கோப்பையில் பங்கு கொள்ளா விட்டாலென்ன நான் போகி-றேன் என ஓமானிலிருந்து கத்தாருக்கு பயணித்தார்.
அதுவரை இந்தியாவில் மட்டும் பிராசித்தமாகியிருந்தவர் உலகம் முழுக்க பிராசித்தமானார்.

2024 dubai to india 23 countries.
ஏனைய பிரயாணிகளைப் போல தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பாததாலோ என்னவோ நாஜிக்கு அனுசரணையாளர்கள் போதியளவு கிடைக்கவில்லை.
ஆனாலும் தன்னுடைய வலைத்தள விளம்பரங்களை நம்பி வெறும் 200 ரியால் (500indian rupees)பணத்துடன் தன்னுடைய பயணத்தை தொடங்கினார்.

ஒவ்வொரு நாட்டு எல்லை அனுமதி விசா மற்றும் வாகன அனுமதி எல்லாவற்றையும் அது வரை தான் உருவாக்கி வைத்திருந்த சுற்றுலா நண்பர்களின் உதவியுடன் தயார் செய்துகொண்டு பயணிக்கிறார். எல்லை அனுமதி கிடைக்கும் வரை அந்த நாட்டுக்குள் சுற்றிக்கொண்டிருப்பார். தன்னுடைய எல்லா பயண அனுபவங்களையும் நேரலையாக தன்னுடைய வலைத்தளப் பக்கத்தில் பதிவேற்றிக்கொண்டே பயணிப்பார். அது தன்னுடைய பயணம் பாதுக்காப்பாக இருந்ததற்கு அது ஒரு காரணம் எனச் சொல்கிறார்.

தன்னுடைய இந்த சாகசப் பயணத்துக்கு ole india (மலையாளத்தில் "அவள் இந்தியா" எனப் பொருள்) எனப் பெயரிட்டு விளம்பரப் படுத்தினார். 2025 செப்டம்பர் 19ஆம் திகதி தொடங்கிய தரை வழிப் பயணம் இந்தியா வந்தடைய சுமார் 17மாதங்கள் எடுத்தது.

தன்னுடைய modified செய்த வண்டிக்குள் ஓட்டுநர் ஆசனம் தவிர்த்து மொத்த வண்டியையும் ஒரு சிறிய வீடு போல தயார் செய்து வைத்திருந்தார். பெரும்பாலும் வண்டியிலேயே உறங்கிக்கொண்டார். பாதுக்காப்பில்லாத சூழல்களில் அந்தந்த நாட்டவரின் வீடுகளில் தஞ்சம் புகுவார்.

பல்வேறு கலாச்சாரங்களை அனுபவிப்பதும், வாழ்க்கையை சவாலாக எதிர்கொள்வதும் இவரின் பயணத்தின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக, "Overlanding" என்ற முறையில் தன்னுடைய வாகனத்தில் நாடுகளை கடந்து பயணம் செய்வது அவரை மற்ற பயணிகளிலிருந்து தனித்துவமாக்குகிறது.

அவர் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட Mahindra Thar வாகனத்தில் பல நாடுகளை கடந்து பயணம் செய்து வருகிறார். இதுவரை 14க்கும் மேற்பட்ட நாடுகளில் அவர் தனது தடத்தைப் பதித்துள்ளார். இந்த பயணம் சுலபமானது அல்ல. பல சவால்கள், மொழி வேறுபாடுகள், காலநிலை மாற்றங்கள் ஆகியவற்றை அவர் தைரியமாக எதிர்கொண்டுள்ளார்.




*"ஒரு ஊரில ஒரு அழகான அறிவான ராஜகுமாரன் இருந்தான். அந்த ராஜ குமாரனுக்கு ஒரேயொரு பிரச்சனை மட்டும் இருந்தது. அவன் யுத்தத்துக்கு மட்டும் போகமாட்டான். ஏன்னா ரத்தத்தைப் பார்த்தாலே அவனுக்குப் பயம். அதனால ராஜகுரு ராஜகுமாரன் பயத்தைப் போக்குவதற்கு ஒரு யோசனை சொன்னார். யாரும் போகாத காட்டுக்குப் போய், யாரும் பார்க்காத அல்லிராணியைப் பார்த்து, யாரும் தொடாத பரிசு வாங்கீற்று வந்தால் அவனுக்கு ரத்தம் மேலயிருக்கிற பயம் போயிடும் என்று சொன்னாரு.*
*ராஜகுமாரன் உடனே அல்லிராணியைத் தேடி யாரும் போகாத காட்டுக்குப் போனானாம். காடு, மலை, அருவி எல்லாம் அலைந்து அந்த அல்லிராணியைக் கண்டு பிடித்தான் அந்த ராஜகுமாரன். அவன் பார்க்கவே பரிதாபமாக இருந்தான். அவன் நிலைமையைப் பார்த்துப் பரிதாபப்பட்ட அல்லிராணி என்ன வேணும் உங்களுக்கு அப்பிடீன்னு கேட்டாளாம். அல்லிராணியைப் பார்த்த ராஜகுமாரன் என்ன பேசுவது என்றே தெரியாமல் ஸ்தம்பிச்சு நின்னானாம். அந்த ராஜகுமாரனுக்கு அல்லிராணி கையில இருக்கிற பரிசு என்ன என்று தெரியாதே... ஆனால் அந்த ராஜகுமாரன் எனக்கு நீங்க முழுசா வேணும் என்று சொன்னான். அப்போ அல்லிராணி வெட்கப்பட்டுச் சொன்னாங்களாம், நானே எனக்குச் சொந்தமில்லையே"*
ஒரு குழந்தைக்குக் கதை சொல்லும் பாட்டியின் குரலில் இப்படித்தான் அந்தக் கதை ஆரம்பிக்கிறது.

சில படங்களைப் பார்க்கும் போதோ, புத்தகங்களை வாசிக்கும் போதோ இவ்வளவு நாட்களாக ஏன் இதைத் தவற விட்டோம் என்று தோன்றும். அப்படித்தான் எண்ண வைத்தது மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட இந்த "அல்லி" என்ற படமும்.

ராஜகுமாரன் அல்லி ராணியைத் தேடிச் செல்லும் படம் முழுவதும் மொத்தமே மூன்று நபர்கள் மட்டுமே. பாதை முழுவதும் காடு, மலை, அருவி என கேரளாவின் இயற்கை அழகும் நீர்வளமும் அந்த மூடல் காலநிலையும் சிலுசிலுக்கும் மழையின் சிலிர்ப்பும் தொடங்கி முடியும் வரை பயணத்தில் சக பயணிகள் போலக் கூடவே வருகின்றன.

பதின்மத்தின் ஆரம்பத்திலிருக்கும் ஒரு பாடசாலை மாணவி, பாடசாலைச் சீருடையுடன் வீட்டுக்குத் தெரியாமல்
அதிகாலையில் பட்டணம் பார்க்கப் புறப்படுவதும், அவளைப் பொறுப்பாக அழைத்துச் செல்வதாக எண்ணும் ஒரு காதலன், அல்லது நண்பன் இவளைத் தன் படங்கு மூடிய வாகனத்தில் அழைத்துச் செல்லும் இன்னொரு மனிதன் என மூவரும் ஒரே ஆடையுடன் இரண்டு நாட்களில் நிகழும் பயணமே "அல்லி" படத்தின் கதை.

பட்டணத்தின் கலகலப்பில், வண்ணங்களில் மயங்கும் அவளது சிரிப்பில் மயங்கிப் பொத்திப் பொத்தி அழைத்துச் செல்கிறான் அவன். அத்தனைக்கும் சாட்சியாய் அழைத்து வந்த இன்னொருவன் அவனும் இவர்களோடு கூடவே பயணிக்கிறான். அல்லது அவனையே பாதுகாப்பெனப் பற்றிப் பிடித்திருக்கிறார்கள் அவர்கள்.

பெண்பிள்ளைகளுக்கு அந்நிய மனிதர்கள் மேலுள்ள பயமும், அவநம்பிக்கையும் கூட அவர்களோடு அல்லது அவளோடு கூடவே தொடர்ந்துகொண்டிருக்கிறது.
உயர் கட்டடங்கள், கடற்கரையென அவளுக்கு அனைத்துமே வியப்பானவை. ஒரு கடற்கரையில் கால் நனைப்பதற்குக்கூட அச்சமூட்டும் காமத்தின் பாதங்கள் பதின்மத்தின் சின்னஞ் சிறு பிஞ்சுகளைத் தொடரும் போதும் அவன் பாதுகாப்பெனக் கூட்டி வந்தவனையே திரும்பத் திரும்ப அழைக்கிறான்.

அன்றைய நாளில் அவர்கள் ஊருக்குத் திரும்ப முடியாத சந்தர்ப்பம் அமைய அல்லது அமைக்கப்பட பட்டணம் பார்த்த சந்தோசம் முற்றிலும் வடிந்து மிரளத் தொடங்குகிறாள். மிரள்பவளைச் சமாதானம் செய்து கெஞ்சிமன்றாடி எங்காவது தங்கிவிட்டு அடுத்தநாள் காலையில் செல்லலாமெனப் போராடுகிறான் அவன். கெஞ்சலுக்குப் பணியாதவள், அடுத்தவன் வன்முறைக்குள் கோழிக் குஞ்சாக முடங்கிப் போகிறாள்.



இரவுகள் என்பது எப்போதும் பெரும் அபாயத்தையும் இரகசியங்களையும் ஒரு முழு நாளின் அல்லது முழு வாழ்வின் மொத்த வடிவத்தையும் மாற்றி அமைக்கும் சக்தி வாய்ந்தவை. அப்படித்தான் அமைகிறது அவர்கள் தங்கிய இரவு.

அழைத்து வந்தவனை விட்டு, மிரட்டியவன் பின்னே நடக்க வைக்கும் அந்த முரண் ஏற்படுத்துவது தான் பிஞ்சிலேயே நாம் எம் பெண்குழந்தைகளுக்குள் விதைக்கும் கலாச்சாரக் கட்டாக இருக்கலாம். அவர்கள் யதார்த்தத்துக்கு வெளியே ஒரு வரிகூட பயணித்ததாக நான் உணரவில்லை. ஆனால் அந்த யதார்த்தம் ஏற்படுத்தும் அதிர்வு நாளாந்தம் அறியும் செய்தி தான் என்றாலும் பதறுகிறது. மனதைப் பிய்த்துப் போட்டு விட்டு மறையாமல் மனதுக்குள்ளேயே சப்பணமிட்டு அமர்ந்து கொண்டு போகமாட்டேன் என அடம் பிடிக்கின்றன காட்சிகள்.

உடல் மலர்ந்து, மனம் வளராத குழந்தைகளின் இந்தப் பதின்மத்தைக் கடப்பது என்பது எத்தனை பெரிய சவால் இந்தப் பூமியில் என்பதை இரத்தம் சிந்தி நிரூபித்திருக்கிறது படம்.

நடிகர்கள் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. நிமிஷா சஜயன், ஜோஜு ஜோர்ஜ், அகில் விஷ்வனாந் என ஆளுக்காள் வழமைபோல தங்கள் நடிப்பில் போட்டியிட்டிருக்கிறார்கள். விட்டேனாபார் என ஒளிப்பதிவாளர் தன் கமெராக் கண்களால் காடு, மலை, அருவி எல்லாம் ஓடி ஓடி இயற்கையையும் இவர்களையும் துரத்தியிருக்கிறார். மொத்தத்தில் அனைவரும் ஒன்று சேர வென்றிருக்கிறார்கள்.

பார்க்க விரும்பும் யாருக்கும் சுவாரசியத்தை இழக்கவைக்க விரும்பாமையால் இதற்கு மேல் எழுதவில்லை.
மேலதிகமாக விமர்சிக்கவும் ஏதுமில்லை. வாழ்வை, அதன் கொடுமையான, கசப்பான பக்கங்களை வார்த்தைகாளால்கூட பதிவு செய்ய மனம் இணங்குதில்லை. மொத்தத்தில், என்னைப் பொறுத்தவரை “அல்லி” படமல்ல..., பாடம்.

படத்தின் இறுதியில் பாட்டி குரலில் கதை முடித்ததையே நானும் சொல்லி முடிக்கிறேன். “கடைசியா அல்லி ராணி சொன்னாங்களாம் நான் யாருக்குச் சொந்தம் என எனக்கே தெரியவில்லையே” என.

படம் youtubeஇல் இருக்கிறது பார்த்து விட்டு தேன்தமிழிதழ் மூலம் அல்லிராணிக்குச் சொல்லுங்கள்....
அல்லிராணி கடைசியில் யாருக்குச் சொந்தம் என்று. ▪




நீண்டு கடந்த காலங்களின் பின்
நினைவுகள் தேங்கிய நீர்த்தேக்கத்தினருகே
நீர் தேங்கிய விழிகளோடு
நேற்றுன்னை கண்டிருந்தேன்.

உச்சிமுடி சற்றே உதிர்ந்து
நெற்றியில் சில நேர்கோடுகளை
காலத்திடம் அவசரமாக வாங்கியிருந்தாய்.

கண்கள்
தொலைத்திருந்த கனவுகளை
கண்ணாடிப் பார்வையினுள்
கவனமாக மறைத்திருந்தாய்

வருந்தி அழைத்திருந்த
வயதுக்கு முன்னான வயோதிபத்தில்
தோல்விகளின் மனத்தளர்வை
உடற் தளர்வால் எழுதியிருந்தாய்

வெற்றுநதியை
ஒற்றி எடுத்த பார்வையுடன்
வெறுமையாக திரும்புகையில்
எதிர்பாராமல் என்னில் எதிர்ப்பட்டாய்.

உச்சிமுதல் பாதம்வரை
ஒரே கணம் ஓடிய பார்வையில்
உருண்டு விழுந்த உயிர்த் துளிகளில்
உனது கனவு தேவதை
எத்தனையாவதோ முறையாக
இப்போதும் உடைந்து சிதறி
உருவமிழந்திருக்கலாம்
என் கண்ணீர்த்துளிகளில்
கரைந்து வழிந்த உன் பிம்பத்தைப்போல.

பின்
வாழ்வின் யதார்த்தங்களுடன்
உன்வழியில் நீயும்
என் பாதையில் நானுமாக
எதிரெதிர் திசையில்
நடந்துகொண்டிருந்தோம்.

நதி மிதந்த அலையின் வரிகளில்
அசைந்து கொண்டே
இசைத்துக் கொண்டிருந்தது
எனதும் உனதுமான
காலம் கரைக்காத கனவுப் பாடல் ▪

# தணிக்கையின் நிழலும் தந்திரத்தின் வணிகமும்:

## அறிவுச் சுதந்திரத்தின் புதிய சவால்கள்



—வைனதேயன்.

புத்தகம் என்பது அறிவின் ஊற்றாகக் கருதப்பட்ட காலம் மறைந்து, அது இன்று சந்தைக்கான ஒரு கவர்ச்சிகரமான வணிகப் பண்டமாக மாற்றப்பட்டுள்ளது. தற்கால எழுத்துலகில், உள்ளடக்கத்தின் ஆழத்தைவிட நுணுக்கமாகத் திட்டமிடப்பட்ட சுயவிளம்பரங்களும், கவனஈர்ப்பு உத்திகளுமே மேலோங்கி நிற்கின்றன. இத்தகைய வணிகப் போலித்தனங்களுக்கு மத்தியில், சமுதாய விழிப்புணர்வையும் விமர்சனச் சிந்தனையையும் தூண்டும் நூல்கள், எப்போதும் அரசியல் அதிகாரமையங்களுக்கு விடுக்கப்படும் பெரும்சவாலாகவே கருதப்படுகின்றன. வரலாற்றின் பக்கங்களைப் புரட்டினால் ஒரு கசப்பான உண்மை புலப்படும்: அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயகவாதிகளோ, இரும்புக்கரம் கொண்ட சர்வாதிகாரிகளோ அல்லது புரட்சித்தலைமைகளோ அவர்கள் எந்தப் புவிசார் பின்னணியைக் கொண்டிருந்தாலும் அனைவரிடமும் ஒரு பொதுவான குணம் உண்டு அது, மக்களைச் சிந்திக்கத் தூண்டும் காரணிகளைக் கட்டுப்படுத்துதல் அல்லது தடை செய்தல் ஆகும்.

தங்கள் நலன்சார்ந்த ஆதிக்க அரசியல் மற்றும் மத ஒழுங்குகளைத் தக்க வைத்துக்கொள்ள விரும்பும் நிறுவனங்கள், அறிவுருவாக்கத்தின் மீதான முழுக் கட்டுப்பாட்டையும் எப்போதும் தம் வசமே வைத்திருக்க முனைகின்றன. தமது அதிகாரக் கட்டமைப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் மாற்றுக்கண்ணோட்டங்களைச் சிதைப்பதையே இவை முதன்மை நோக்கமாகக் கொள்கின்றன. இதற்கான வரலாற்றுச் சான்றுகள் காலந்தோறும் நீண்டு கிடக்கின்றன. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "Librorum Prohibitorum" எனும் தடைசெய்யப்பட்ட புத்தகப் பட்டியலும், 1560களில் அஸ்டெக்-மாயன் நாகரிகச் சுவடிகள் திட்டமிட்டு அழிக்கப் பட்டமையும் சமயத் தணிக்கையின் கோர முகத்திற்குச் சான்றுகளாகும்.

அதேபோல், 2010-இல் அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் (Pentagon), அந்தோணி ஷாஃபரின் "Operation Dark Heart" புத்தகத்தின் 9,500 பிரதிகளை விலைக்கு வாங்கி அழித்த விதம், நவீனத் தொழில்நுட்பக் காலத்திலும் ஒரு பேரரசு நினைத்தால் அறிவுருவாக்கத்தின் பௌதீக வடிவங்களை (Physical copies) எவ்வாறு முற்றாக ஒழிக்க முற்படும் என்பதற்கு ஒரு கசப்பான உதாரண-மாகும். ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்ட உளவு நடவடிக்கைகளின் இரகசியங்களும், அதிகாரி-களின் பெயர்களும் கசிந்துவிட்டதாகக் குற்றம்சாட்டிய பாதுகாப்புத் துறை, தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி இந்நடவடிக்கையை நியாயப்படுத்தியது.

இருப்பினும், இதில் பொதிந்துள்ள சுவாரஸ்யமான முரண் என்னவென்றால், அத்தனைப் பிரதிகளும் அழிக்கப்படுவதற்கு முன்னரே சில பிரதிகள் விமர்சகர்களின் கைகளுக்குச் சென்றுவிட்டன. இதன் விளைவாக, தணிக்கை செய்யப்பட்ட பதிப்பிற்கும் அசல் பதிப்பிற்கும் இடையிலான வேறுபாடு-களை உலகால் எளிதில் ஒப்பிட முடிந்தது.

ஒரு தகவலை மறைக்க முற்பட்டு, அது இன்னும் பலமடங்கு வீரியத்துடன் மக்களிடையே பரவுவதைக் குறிக்கும் Streisand Effect என்பதற்கு இச்சம்பவம் ஒரு சிறந்த வரலாற்றுப் பாடமாகும். அதிகாரத்தின் தணிக்கை முறைகள், சில நேரங்களில் தணிக்கைக்கு உள்ளாகும் விடயத்திற்கே தேவையற்ற விளம்பரத்தையும் முக்கியத்துவத்தையும் தேடித் தந்துவிடுகின்றன என்பதற்கு இதுவே பெரும் சான்றாகும்.

இத்தகைய தணிக்கைகள் குறித்துப் பேசப்படும்போது, பெரும்பாலும் மத நிறுவனங்கள் அல்லது சித்தாந்த அமைப்புகளின் செயல்பாடுகள் மீதே பொதுக் கவனம் குவிக்கப்படுகிறது. ஆனால், ஏக அதிகாரத்துடன் அரசு நிகழ்த்தும் நுணுக்கமான அச்சுறுத்தல்கள் மற்றும் தணிக்கை நடவடிக்கைகள் குறித்து ஒருவிதப் பாராமுகமே நிலவு-கிறது. உண்மையில், சட்டபூர்வமான அங்கீகாரத்துடன் அரசு முன்னெடுக்கும் இத்தகைய ஒடுக்குமுறைகள், மத அமைப்புகளின் தணிக்கையை விடவும் மிக விரிவான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியவை. அரசுகள் "தேசியப் பாதுகாப்பு" அல்லது "பொது ஒழுங்கு" எனும் பெயரில் மேற்கொள்ளும் இத்தணிக்கைகள், விமர்சனக் குரல்களை



மௌனமாக்குவதோடு மட்டுமல்லாமல், மாற்றுச் சிந்தனைகளே உருவாகாத வண்ணம் அறிவுத்துறையை முடக்கிவிடுகின்றன. அதிகார வர்க்கத்தின் இத்தகைய தடையற்ற செயல்பாடுகள் குறித்து நிலவும் மௌனம், ஜனநாயகப் பண்புகளுக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன், ஆதிக்க அரசியலை மேலும் வலுப்படுத்தவே உதவுகின்றது.

விழிப்புணர்வையும் விமர்சனச் சிந்தனையையும் தூண்டும் உன்னதமான நூல்கள் தணிக்கைக்கு உள்ளாகும்போது, இத்தகைய விவாதங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால், இன்றைய வணிகப் போலித்தனங்கள் நிறைந்த சூழலில், “Streisand Effect” என்பது ஒரு தற்காப்பு உத்தியாக அல்லாமல், ஒரு திட்டமிடப்பட்ட சந்தைப்படுத்தல் கருவியாகவே உருமாறியுள்ளது.

தணிக்கைக்கு உள்ளாகும் ஒரு விடயம் தேவையற்ற விளம்பரத்தையும், அதீத முக்கியத்துவத்தையும் பெற்றுவிடும் என்பதை இன்றைய வணிக சக்திகள் நன்கு உணர்ந்துள்ளன. எனவே, அத்தகையசூழல்கள் எதேச்சையாக உருவாகும்போது, அவற்றை நுணுக்கமாகப் பூதாகரமாக்கித் தமக்குச் சாதகமாக மாற்றிக்கொள்கின்றன. இதன் மூலம் கிடைக்கும் “எதிர்மறை விளம்பரத்தை” ஒரு லாபகரமான சந்தைப்படுத்தல் உத்தியாக இவை கையாள்கின்றன.

வேடிக்கை என்னவென்றால், வரலாற்றின் நெடுகிலும் அதிகாரவர்க்கம் அறிவின் குரல்வளையை நெரித்த போதெல்லாம் எவ்விதச் சலனமுமின்றி மௌனமாக இருந்தவர்களும், தணிக்கையின் தீவிரத்தை உணராத அறியாமையில் திளைத்தவர்களுமே இன்று கருத்துரிமையின் காவலர்களாகத் திடீரென உருவெடுக்கின்றனர். இந்தத் திடீர் மாற்றத்திற்குப் பின்னால் இருப்பது அறச்சீற்றம் அல்ல, மாறாக, தணிக்கையையே ஒரு முதலீடாக மாற்றி லாபம் ஈட்டும் வணிகச் சூழ்ச்சி. இன்றைய நடைமுறை யதார்த்தத்தில், ஒரு படைப்பு தணிக்கை செய்யப்படுவதோ அல்லது அரசால் அச்சுறுத்தப்படுவதோ அந்தப் படைப்பிற்கான மிகப்பெரிய “இலவச விளம்பரமாக” மாறிவிடுகிறது. இதனை நன்குணர்ந்த சில வணிக சக்திகள், தமக்குச் சாதகமான அரசியல் சூழல் அமையும்போது, எதேச்சையாக நிகழும் சிறு தடைகளையும் கூட “கருத்துரிமைப் போர்” எனப் பூதாகரமாக்குகின்றன. கடந்த காலங்களில் இதே போன்ற ஒடுக்குமுறைகள் நிகழ்ந்தபோது பாராமுகமாக இருந்த இவர்கள், இன்று அந்த “எதிர்மறை விளம்பரத்தை” எவ்வாறு பணமாக்கலாம் என்பதிலேயே குறியாக உள்ளனர்.




இந்தச் செயல்பாடு, கருத்துரிமைக்காகத் தங்களைத் தியாகம் செய்த உண்மையான அறப்போராளிகளின் வரலாற்றைக் கொச்சைப்படுத்துவதாகும். உண்மையான அறப்போராட்டம் என்பது அதிகாரத்தின் அடக்குமுறைக்கு அஞ்சி, சலுகை-களைத் துறந்து நின்ற ஒரு உன்னதச் செயல். ஆனால் இன்றைய தணிக்கை நாடகங்கள், சந்தையில் கவனத்தை ஈர்ப்பதற்காகத் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றன.
சுருக்கமாகச் சொன்னால், கருத்துரிமைக்காக முன்னெடுக்கப் படும் உண்மையான அறப்போராட்டங்களுக்கும், வணிக லாபத்திற்காகத் தணிக்கையை ஒரு நாடகமாக அரங்கேற்றும் போலித்தனங்களுக்கும் இடையிலான மெல்லிய கோடு இன்று முற்றிலும் மழுங்கிப்போயுள்ளது. எக்காலத்திலும் அதிகாரத்திற்கு எதிராகக் குரல் எழுப்பாதவர்கள், இன்று லாபத்திற்காகக் கருத்துரிமை எனும் முகமூடியை அணிந்துகொள்வது நவீன காலத்தின் ஆகச்சிறந்த முரண்நகை ஆகும். இந்த வணிகப் போலித்தனங்களை அடையாளம் காண்பதே, உண்மையான சிந்தனைச் சுதந்திரத்தைக் காப்பதற்கான முதல் படியாகும்.

போர்க்காலச் சூழலில் நிலவும் அல்லது போரின் வடுக்களைச் சுமந்து நிற்கும் நாடுகளில் ஒரு விசித்திரமான நடைமுறை உண்டு. அஞ்சல் வழியே பெறப்படும் புத்தகங்களில் போர் தொடர்பான விவரணைகளோ, நிழற்படங்களோ அல்லது நுணுக்கமான தகவல்களோ இருந்தால், அவை அரசின் சுங்கத் திணைக்களத்தின் முறையான அனுமதிக்குப் பின்னரே வாசகர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இங்கு நாம் கவனிக்க வேண்டிய முரண் ஒன்றுள்ளது. இத்தகைய தகவல்கள் அச்சு வாகனமான புத்தகங்களில் இடம்பெறுவதைவிடவும், இணைய வெளியில் மிகத் துல்லியமாகவும், அதி வேக-மாகவும், எவ்விதத் தணிக்கையுமின்றிப் பரவிக் கிடக்கின்றன. தேவைப்படுபவர்களுக்கு அவை ஒரு சொடுக்கில் எளிதில் கிடைக்கவும் செய்கின்றன. மறுபுறம், இன்றைய தலை-முறையினரிடையே புத்தக வாசிப்புப் பழக்கம் கணிசமாகக் குறைந்து வருவதாக ஒரு பொதுவான கவலை முன்வைக்கப்பட்டு வருகிறது. இப்படியொரு சூழலிலும், இணையத்தில் தடையின்றிக் கிடைக்கும் அதே தகவல்கள் புத்தக வடிவில் வரும்போது மட்டும் அரசாங்கங்கள் ஏன் இத்தனை தீவிரமாகக் கண்காணிக்கின்றன?
இக்கேள்விக்கான விடை, புத்தகங்களின் நீடித்த வலிமையிலும், அவை உருவாக்கும் ஆழமான வரலாற்றுப் பதிவுகளிலும் பொதிந்துள்ளது. வாசிப்பு குறைந்துவிட்டதாகச் சொல்லப்படும் காலத்திலும், புத்தகங்கள் மீதான இந்த அதிகாரத்துவக்

கட்டுப்பாடு என்பது, ஒரு கருத்தியலை ஆவணப்படுத்துவதில் புத்தகங்கள் இன்றும் கொண்டுள்ள அசைக்க முடியாத முக்கியத்துவத்தையே பறைசாற்றுகின்றது.

அதீத வளர்ச்சி பெற்றுவரும் நவீன தகவல் தொழில்நுட்ப யுகத்தில், புத்தகங்கள் மற்றும் தகவல்கள் மீதான தணிக்கை அல்லது தடைகள் எந்தளவுக்குச் சாத்தியம்? இக்கேள்வி இன்றைய சமகால உரையாடல்களில் ஒரு முக்கிய விவாதப் பொருளாக மாறியுள்ளது. தகவல்களின் "கட்டற்ற பரவலை" இந்த இலத்திரனியல் யுகம் சாத்தியமாக்கிவிட்டதாக நாம் நம்ப வைக்கப் பட்டிருக்கிறோம். ஆனால், இத்தகைய மாயைகளுக்குப் பின்னால் ஒரு கசப்பான உண்மை ஒளிந்து கிடக்கிறது. உண்மையில், இன்று பரிமாறப்படும் ஒவ்வொரு சிறு தகவலும் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிக நுணுக்கமாகவும், துல்லியமாகவும், ஆதாரபூர்வமாகவும் அதிகார வர்க்கத்தால் கண்காணிக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பப் புரட்சி வழங்கியுள்ள "சுதந்திரம்" என்ற போர்வையில், தனிமனிதச் சிந்தனைகளும் தரவுகளும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுவதை அதன் கவர்ச்சி-கரமான மாயைகள் மறைத்து விடுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், நாம் அடைந்துள்ளதாகக் கருதும் இந்த டிஜிட்டல் சுதந்திரம் என்பது, ஒரு கண்ணுக்குத் தெரியாத அதிநவீனக் கண்காணிப்புக் கோட்டையினுள் சிறைப்பட்டிருப்பதே ஆகும்.

தற்காலத்தில் இணையத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில், புத்தகங்களை நாடிச் செல்வோர் மிகச் சிலரே. இருப்பினும், புத்தகங்கள் சென்றடையும் அந்தச் சிறிய வட்டத்தைக் கண்காணிப்பதும் கட்டுப் படுத்துவதும் அதிகார வர்க்கத்திற்கு அவ்வளவு எளிதான காரியமாக இருப்பதில்லை. இந்த உண்மையை நாம் உணர்ந்து கொண்டாலே, புத்தகங்கள் மீதான அரசின் பல்வேறு கட்டுப்பாட்டு நடைமுறைகளின் பின்னணியிலுள்ள உண்மையான நோக்கத்தை அறிய முடியும்.

நவீன தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், நூலகங்கள் மற்றும் நிறுவனங்களின் புத்தகச் சேகரிப்புகளை விரல்நுனியில் நிரவகிக்கும் வசதியை வழங்கியுள்ளன. எந்தப் புத்தகம், எந்த அடுக்கில், எந்த நிலையில் உள்ளது என்பதை இன்று மென்பொருள்கள் துல்லியமாகக் காட்டுகின்றன.

ஆனால், இந்தத் தொழில்நுட்ப வசதியே ஒரு ஆபத்தான ஆயுதமாகவும் உருவெடுத்துள்ளது. பகிரங்கமான அறிவிப்போ அல்லது தடையுத்தரவோ இன்றி, ஒரு குறிப்பிட்ட கருத்தியல் சார்ந்த புத்தகங்களை நூலக அலமாரிகளிலிருந்து அடியோடு அகற்றுவதை இது எளிதாக்கியுள்ளது.

நிறுவனங்களின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டிய கடமை பணியாளர்களுக்கு இருப்பதால், மேலிடத்து உத்தரவின் பேரில் இத்தகைய "அகற்றல் நடவடிக்கைகள்" மிகவும் துல்லியமாகவும் சத்தமின்றியும் அரங்கேற்றப் படுகின்றன. பகிரங்கத் தடையை விடவும், இத்தகைய மறைமுகத் தணிக்கை முறையே இன்று அதிகப் பயனுள்ள ஒடுக்குமுறையாகக் கையாளப் படுகிறது.

குறிப்பாக, நூலகங்களிலிருந்து இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்ட நூல்கள், அக்காலத்து இயக்கங்களின் வெளியீடுகள், இனவழிப்பு மற்றும் போரின் கோர வடுக்களைப் பதிவுசெய்த ஆவணங்கள் ஆகியவை மர்மமான முறையில் "மாயமாகிப் போகும்" சூழல் இன்று நிலவு-கிறது. வரலாற்றைத் திரிப்பதற்கும் அல்லது மறைப்பதற்கும் அதிகார வர்க்கம் கையாளும் இந்த நுணுக்கமான உத்தி மிகவும் அச்சத்திற்குரியது. இதில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால், முற்காலங்களில் கருத்துச் சுதந்திரத்திற்காகவும், தணிக்கைக்கு எதிராகவும் உரக்கக் குரல் கொடுத்த அறிவுஜீவிகளும், இலக்கியவாதிகளும், சமூகச் செயற்பாட்டாளர்களும் இந்த "அறிவிக்கப்படாத தணிக்கை" குறித்து மௌனம் காப்பதேயாகும். பொது வாசிப்பிலிருந்து திட்டமிட்டு அகற்றப்படும் இந்தப் புத்தகங்கள் குறித்து அறிந்தும் அறியாமலும் அவர்கள் காக்கும் இந்த அமைதி, ஒரு தேசத்தின் கூட்டு நினைவாற்றலை அழிப்பதற்கு அதிகாரத்திற்குத் துணை போவதாகவே அமைகிறது.



**அதிகார வர்க்கத்தின் தணிக்கை வளையத்திற்குள் சிக்காத இந்தப் புத்தகக் காதலர்களின் தனிப்பட்ட சேகரிப்புகள், உண்மையில் அமைப்புகளுக்கு அப்பாற்பட்டுத் தன்னிச்சையாக நிகழும் உன்னதமான "பண்பாட்டுப் பாதுகாப்பு இயக்கங்களாகவே"** (Cultural Resistance Movements) **செயல்படுகின்றன. பொதுத் தளங்களில் மௌனமாக்கப்படும் உண்மைகள், இத்தகைய ரகசிய அலமாரிகளில் இன்றும் உயிர்ப்புடன் உறங்கிக் கொண்டிருக்கின்றன.**

அரசியல் மற்றும் கருத்தியல் ஆதிக்கங்களால் பொது நூலகங்களிலிருந்து சத்தமின்றி அகற்றப்படும் புத்தகங்களின் இருப்பைத் தக்கவைக்கும் பெரும் பொறுப்பு, இன்று வெளிப்படையாகத் தெரியாத தனிநபர் சேமிப்புகளிடமும் வீட்டு நூலகங்களிடமுமே.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் மட்டுமே, தனிநபர்களைச் சென்றடையும் புத்தகங்கள் மீது அரசு ஏன் இத்தனை கட்டுப்பாட்டு நடைமுறைகளை மேற்கொள்கிறது என்பதன் பின்னாலுள்ள இரகசியங்களை நாம் புரிந்துகொள்ள முடியும்.

■




-அவ்ரோடித் சுப்ரமணி-

சில பாடல்கள், சில காட்சிகள் ஒரு முறை கேட்டதுமே, பார்த்ததுமே எமக்குள் நுழைந்து மனதுக்குள் அமர்ந்து கொண்டு நாள் முழுதும் “உன் உதடுகளில் கூடவே வருவேன்” என அடம் பிடிக்கும்.

அப்படி, நெய்தல் பத்து எனும் பாடல் தொகுப்பிலிருந்து அண்மையில் கேட்ட ஒரு பாடலும் “மனதுள் நுழைவேன்” என அடம்பிடித்தது. “கடல் ரோஜா” எனப் பெயரிடப் பட்டிருக்கும் பாடல், ஆரம்பிக்கும் போதே நெய்தல் நிலத்துக்கே உரிய அத்தனை கண்ணுக்குக் குளிர்ச்சியான பளீர் என்ற கரையோர அழகைக் கண்களில் விதைத்துக் கொண்டு ஆரம்பித்திருந்தது தான் அதன் மீதான ஈர்ப்புக்கு முதற் காரணம் என நினைக்கிறேன்.

இன்னுமொன்றும் இருக்கிறது இசையையும், இயற்கையையும் ஒன்றாக இணைத்து ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு ஏலேலோ.... என்ற ஒலி காதில் விழும் போதே கடல் மனகண்ணில் அலையடிக்க ஆரம்பித்து விடும். இங்கும் ஏலேலோவிலிருந்து விரி-கிறது பாடல்.

ஊசியிலைத் தாழம்பூவின் வாசனையை வீசிச் செல்லும். பாசி முனைப் பாதகத்தியே...... என்று மொட்டவிழ்கிறாள் கடல் ரோஜா. மௌனமாய் கண்களால் கதைசொல்லிக் காதலிக்க ஏற்ற இடம் நீர்க்கரையோரம். இங்கு காதலே கடலோடு எனும் போது அது இன்னும் மென்மையான அலைகளால் வருடுகிறது. அதிலும் காட்சி முழுவதும் புன்னகையோடு வரும் அந்தப் பெண் ஒரு மென்னலை போல அத்தனை குளிர்ச்சியாகக் காதலை நமக்குள் கடத்துகிறாள்.

மெய் சொல்வதானால் பாடல் வரிகளில் மட்டுமல்ல, பார்க்கும் போதுகூட “கூசுதடி கண்ணிரண்டும் குண்டுமணிக் கன்னக் குழியே...” என அந்த முகம் பார்த்துப் பாடத் தோன்றுகிறது. அத்தனை அழகு அப்பெண்ணின் புன்னகை. அவள் கூட கடல் போல அத்தனை அழகு. அதில் நான் விழுந்தேன் என்பதும் உண்மை. இன்றைய தலைமுறையிடம் காதல் பற்றிக் கேட்டால்கூட, காதலை மென்மையாய் வருடிவருடித் தர ஏற்றது 80,90களின் பாடல் என்பார்கள். கடல் ரோஜாவும் என்னை அந்தக் காலத்துக்குத் தான் அழைத்துச் சென்றாள் தன் காட்சிகளால், இசையால் பாடல் வரிகளால்.

பாடலில் சொல்ல மறக்கவேமுடியாத விடயம் அந்தக் கமெரா + எடிட்டிங் கடலை, கடலலைகளை, வானை, கோவில்களை, அரவமற்ற வீதிகளை என அப்படியே அள்ளிக் கொண்டு வந்து பாடலில் படையலிட்டிருக்கிறார்கள். தனித்தனியாகப் பாராட்ட ஏதுமில்லை நீயா நானாவென போட்டி போட்டது போல ஒரு படைப்பைக் கூடி உருவாக்கியிருக்கிறார்கள்.

முத்தாய்ப்பாய் பாடலின் இறுதி வரி “எப்போதும் உன்காதல் நெய்தல்தானே, இக்கரையில் நாமிருவர் வாழ்ந்திருப்போம்..” மனதை மெல்லிதாய் கசக்கி விடும் இந்த வரிகள். அதுவொன்றும் புதினமில்லை. கடலை தாயாய், மகளாய், காதலியாய் அணுவணுவாய் ரசிக்க நேசிக்கத் தெரிந்த, கடலே உயிராய் சுவாசிக்க முடிந்த தமயந்தியிடமிருந்து இந்த வரிகள் வெளிப்படாது போயிருந்தால் தான் ஆச்சரியம்.

கடல் ரோஜா அலைகளில் அசைந்தபடி மணக்கிறாள் மனம் முழுதும். முகர்ந்து பாருங்கள்.

Singers: Seeger & Shahana
Music: Vicky Mahesan
Lyrics: Thamayanti Simon
Edit: Selvaraj Thanushan
Designs: Nova Designs
Presented by: VM Creative



# ஆசிரியர் நினைத்தால் உலகையே மாற்றலாம்

சி.ரமேஸ்

**இலக்கிய விமர்சகர், ஆய்வாளர் மற்றும் கவிஞர் எனப் பன்முகத்தன்மை கொண்ட திரு. சி. ரமேஸ் அவர்கள், புத்தகங்கள் மீது தீராக் காதல் கொண்ட ஒரு தீவிர வாசகர் ஆவார். தற்போது ஆசிரியராகப் பணியாற்றி வரும் இவரது கல்விப் பணி மீதான அர்ப்பணிப்பைப் பாராட்டும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான "பிரதீபா நல்லாசிரியர்" விருது 2013-ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கி கௌரவிக்கப் பட்டது.**



"ஆசிரியர் நினைத்தால் உலகையே மாற்றலாம்" என்பது ஒரு பொதுவான கூற்று மட்டுமல்ல அது நான் என் கண்களால் கண்ட உண்மையாகும். கல்வி என்பது வெறும் பாடப்புத்தக அறிவை வழங்குவதல்ல, அது ஒரு மனிதனை உருவாக்கும் செயற்பாடு. அந்த உருவாக்கத்தின் மையத்தில் நிற்பவர் ஆசிரியர் தான்.

சென்றவருடம் கல்வி பொதுத் தராதர உயர்தரப்பரிட்சையில் ஒரு வகுப்பு பற்றிய அனுபவம் இதற்கு சிறந்த சான்றாகும். அந்த வகுப்பில் இருந்த மாணவர்கள் கல்வியில் அக்கறை அற்றவர்களாகக் கருதப்பட்டதால், பல ஆசிரியர்கள் அந்த வகுப்பிற்கு பாடம் எடுக்கத் தயங்கினர். அந்நேரத்தில், அதிபர் அந்தப் பொறுப்பை எனக்கு ஒப்படைத்தார். மொத்தம் 13 மாணவர்கள் கொண்ட அந்த வகுப்பு, ஆரம்பத்தில் நம்பிக்கையற்ற நிலையில் இருந்தது.

கல்வி என்பது அறிவை நிரப்பும் செயல் அல்ல, மனிதனை உருவாக்கும் செயல் எனக் கூறியவர் John Dewey. அவரது கருத்துப்படி, கல்வி வாழ்க்கைக்கு முன்னேற்பாடு அல்ல கல்வியே வாழ்க்கை. இதன் பொருள், ஒரு ஆசிரியர் மாணவரின் வாழ்வோடு இணைந்து செயல்படும்போது தான் உண்மையான கற்றல் நிகழ்கிறது. ஆதலால் இதனை உணர்ந்து முடிவு எடுத்தேன். "மாணவர்களை மாற்ற முடியாது" என்ற எண்ணத்தை விடுத்து, "மாணவர்களை மாற்ற வேண்டும்" என்ற உறுதியுடன் நான் அவர்களை அணுகினேன். ஊக்கமளித்தேன், நம்பிக்கை கொடுத்தேன், அவர்களுடன் நட்பு வளர்த்தேன். பாடத்தை மட்டும் அல்ல, வாழ்க்கையையும் கற்றுக் கொடுக்க முயன்றேன்.

அதன் விளைவாக, அந்த 12 மாணவர்களில் 4 பேர் பல்கலைக் கழகத்திற்குத் தேர்வாகினர். அவர்கள் 2A சித்திகளையும் 1B சித்தியையும் பெற்றனர். உருப்படாது என்று மாணவர்களை வைத வாய் அன்று மாணவர்களையே மெச்சி நின்றது. இது ஒரு சாதனை அல்ல, மாணவரைப் புரிந்து கொண்ட ஒரு ஆசிரியரின் மன உறுதியின் விளைவு.

இதேபோல் 2025ஆம் ஆண்டு 12A1 நான் தமிழ் ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். அவ்வகுப்பில் இருந்த மாணவர்கள் என்னிடம் கற்க மாட்டேன் எனக் கூறி முரண்டு பிடித்தார்கள். ஏனெனின் நான் கண்டிப்பாணவன் என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் குடிகொண்டிருந்தது. அத்தோடு நான் அளவுக்கு மீறி பாடத்தை கற்பிப்பவன் என்ற எண்ணமும் அவர்களுக்கு இருந்தது. உப அதிபர் அன்று கூப்பிட்டு எனக்கு வகுப்பெடுத்தார். 24 வருட சேவிஸில் அது முதல் அனுப்பவம். அவர் மனம் நோகக் கூடாது என்பதற்காக அவர் கூறிய அத்தனை புத்திமதிகளையும் செவிமடுத்தேன். பின்னர் அதிபர் என்னை அழைத்து அதே வகுப்பில் உள்ள ஏனைய மாணவருக்கு வகுப்பெடுக்க பணித்தார். நான் மறுத்து என்னை ஒதுக்கித் தள்ளிய மாணவருக்கே வகுப்பெடுப்பேன் எனக் கூறி அவ்வகுப்பையே எனக்குத் தரும்படி கேட்டு வாங்கி வகுப்பெடுக்கத் தொடங்கினேன்.

Paulo Freire தனது Critical Pedagogy கோட்பாட்டில், "கல்வி என்பது சுதந்திரத்தின் பயிற்சி" என்று கூறுகிறார். மாணவர்களை வெறும் தகவல் பெறுபவர்களாக அல்லாது, சிந்திக்கும் மனிதர்களாக மாற்ற வேண்டும் என்பதே அவரது நோக்கம். நான் கற்றுக் கொடுத்த அந்த வகுப்பிலும் இதையே

நடைமுறைப்படுத்தினேன். மாணவர்களின் மனநிலையை மாற்றி, அவர்களை தங்களது திறனை உணரச் செய்தேன். இதனால் வகுப்பெடுக்கத் தொடங்கிய சில நாட்களிலேயே அவர்களுக்கு என்னைப் பிடித்துக் கொண்டது.

“ஒரு நல்ல ஆசிரியர் நம்பிக்கையை ஊட்டுவார், கற்பனையைத் தூண்டுவார், கற்றலை நேசிக்கச் செய்வார்” என்ற பொன்மொழியை கூறியவர் Brad Henry. இந்தச் சொற்கள் ஒரு ஆசிரியரின் உண்மையான கடமையை மிக எளிமையாக விளக்குகின்றன. நானோ இதனை உள்வாங்கிக் கொண்டு மாணவர்களுக்கு நம்பிக்கை அளித்தேன். இதனை அவர்களின் வெற்றிக்கான முதல் படியாகக் கருதினேன்.

கற்பித்தல் என்பது தனியே பாடத்தை படிப்பிப்பது மாத்திரமல்ல. பரிட்சைக்கு விடை எழுதுவதையும் கற்றுக் கொடுப்பது. புள்ளித்திட்டங்களை உள்வாங்கிக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர் வெற்றி பெறுகிறார்.
அதேசமயம் Howard Gardner முன்வைத்த Multiple -
-Intelligences Theoryயும் ஆசிரியர் அறிந்து வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் ஒரே மாதிரியான திறமையுடையவர்கள் அல்லர் அவர்களின் திறமைகள் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன.
ஆசிரியர் அதனை உணர்ந்து கற்றல் முறையை மாற்றினால், ஒவ்வொருவரும் வெற்றி பெற முடியும். எனது வகுப்பிலும் இதனையே பின்பற்றினேன். இன்று என்னை வெறுத்த பன்னிரண்டு பேரும் சித்தி அடைந்துள்ளனர்.
இதில் 5மாணவர்கள் A சித்தியைப் பெற்றனர்.
மூன்று மாணவிகள் B சித்தியையும் நான்கு மாணவர்கள் C சித்தியையும் பெற்றனர். இது ஒரு வகுப்பின் முழுமையான மாற்றமாகும். இந்நேரத்தில் “Educating the mind without educating the heart is no education at all” என்ற அரிஸ்டோட்டிலின் சிந்தனையை நினைவுபடுத்திப் பார்க்கிறேன். அது அப்படியே இங்கு பொருந்திப் போகிறது. இதயத்திற்குக் கல்வி அளிக்காமல் மனதிற்கு மட்டும் கல்வி அளிப்பது, உண்மையான கல்வி அல்ல.

ஆதலால் மாணவரின் இதயத்தை அறிந்து கற்பியுங்கள் வெற்றி பெறுவீர்கள். நான் மாணவர்களின் அறிவை மட்டும் அல்ல, அவர்களின் மனதையும் உருவாக்க முயல்கிறேன். ஒவ்வொரு வெற்றியும் பேராடிப் போராடியே பெறவேண்டி இருக்கிறது. மாணவர்களின் தோல்வி என்பது அவர்களின் திறமையின்மையால் மாத்திரம் வருவதல்ல, சரியான வழிகாட்டுதலின் பற்றாக்குறையால். ஒரு ஆசிரியர் தனது கடமையை உணர்ந்து, அன்புடன், பொறுப்புடன் செயற்பட்டால், எந்த மாணவரையும் உயர்த்த முடியும்.

ஆசிரியர் என்பது ஒரு தொழில் அல்ல. அது ஒரு பண்பு. மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் பொறுப்பு கொண்டவர் ஆசிரியர். அவர்களின் ஒரு வார்த்தை, ஒரு ஊக்கம், ஒரு நம்பிக்கை - மாணவர்களின் வாழ்க்கையை மாற்றக்கூடியவை. இறுதியாக, நான் கண்ட உண்மை இதுவே: ஒரு நல்ல ஆசிரியர் ஒரு மாணவரை மாற்றுவார் ஒரு சிறந்த ஆசிரியர் ஒரு தலைமுறையை மாற்றுவார். இந்த உண்மையை நம்பி செயல்படும் ஒவ்வொரு ஆசிரியரும், சமூகத்தின் ஒளியாக விளங்குவர்.

# காற்று மறந்துபோன கோடைப் பொழுது

**ஜமீல்**



விரிந்து கிடக்கும் கிளைகளில்
இலைகள் கூட அசையாத
நிசப்த மதியத்தில்
ஒரு துளி குளிர்ச்சிக்காக
பெருவெளியெங்கும்
அலைந்து திரிகிறேன்

கடைசிவரை காற்றை
எங்கும் சந்திக்க முடியவில்லை

அது எங்கு மறைந்திருக்கும்
எந்த மலையுச்சியில்
இளைப்பாறச் சென்றிருக்கும்

அன்றி பலூன்கள் விற்பவன்
அதனை நிறங்களோடு சேர்த்து
பிடித்து வைத்திருப்பானோ

மழை மறந்த நிலம் போல
உடல் முழுவதும்
ஊறுகிறது வெப்பம்

இந்த நாளை எப்படி
கடப்பதென்று தெரியாமல்
நிழல்களைத் தேடி அலைவுறுகிறேன்

ஒரு சிறுமி மட்டும் தன் சிரிப்பால்
காற்றை மெதுவாக தட்டி
எழுப்பிக் கொண்டிருக்கிறாள்

# அம்மா என்னும் பூரணைச் சந்திரன்

-எம்சிவா-



சித்திரா பௌர்ணமி நிலவு
பார்ப்பதில் நிலவின் மீது ஈர்ப்புண்டு
பரவசங்கள் அதிகம் உண்டு
நிலாக் காட்டி சோறு ஊட்டிய
அன்னையாகட்டும்
இடுப்பில் காவிய அக்காவாகட்டும்
பரவசம் காட்டிய
இந்த நிலவு பொதுவானதுதான்

நிலவில் காலடி வைப்பதில்
அதிக ஈர்ப்பு இல்லை
இருப்பதில் திருப்தி காணும் மனசு இது

இருக்கும் பூமியைத் தாங்கும் மனசாக
சித்ரா பௌர்ணமியில் ஈர்ப்பு உண்டு
தினம் மீதான நம்பிக்கையில் அல்ல
இதற்கும் அப்பால் சித்திரா பௌர்ணமி
அம்மாகளின்
நினைவுகளை நிழலாட வைப்பதினால்.
அம்மா மீது ஈர்ப்பு உண்டு
அது அவர்
நிஜத்தில் வாழும் போதும்
நினைவில் வாழும் போதும்

அதனால்...
சித்தரா பௌர்ணமி
நிலவாக நினைவாக என்னை
அதிகம் ஈர்க்கத்தான் செய்கின்றது.
தன் உயிர் கொடுத்து
எம்மை ஈன்றவளாக
மற்றைய எவரையும் விட
உயர்ந்தவள் அம்மா

எல்லாப் பெண்களும் எமக்கு அம்மாதான்
கருவுறுதலும் சுமப்பதும்
உயிர் கொடுத்து ஈன்றெடுப்பதும்
தோழில் சுமப்பதும்
எல்லாப் பெண்களுக்கும் பொதுவானது
அதனால் சித்திரா பௌணமி
பெண்களை அதிகம் நேசிக்க வைக்கும்
தினம்தான்

அவளுக்காக
அவள் நினைவிற்காக
ஒரு வேளை உணவை
தவிர்த்து உபவாசம் என்றாக
இன்னொருவள் கையால்
ஒரு கவளம் சோறு வாங்கி
உண்பதில் இருக்கும்
பிணைப்பு இணைப்பு
அதனை விட சுகமானது

அவள் எம்மை சுமந்தாள்
நாம் அவர்களை
சுமப்பதற்கும் தயாராக இருத்தல் வேண்டும்
இணைந்து பயணிக்கும்
இந்த சுமைகள் இனிதானதுதான்
சரியானதுதான்
சமத்துவமானதுதான்

சித்திரா பௌரணமி
எனக்கும் சிறப்பானதுதான்
என் மத நம்பிக்கையற்றதற்கு அப்பால்.


# சிறுவர் பூஞ்சோலை



ஆரணி சத்தியதேவன் (7வயது) இலங்கை



## எனது ஆசிரியர்



ச.ஆருதி
(9வயது) இலங்கை

**எனது ஆசிரியர் எனக்கு**
**பல பாடங்களைக் கற்பிப்பார்.**

**அவர் அன்பாகவும்,**
**பண்பாகவும் இருப்பார்.**

**எனது ஆசிரியர் மிகவும் அழகானவர்.**

**அவர் ஒரு முன்மாதிரியான ஆசிரியர்.**
**அவர் எனக்கு உதவிகளும்**
**வழிகாட்டலும் செய்கின்றவர்.**

**அவர் எமக்கு மும்மொழிகளும்**
**பாடங்களும் நடாத்துவார்.**

**எனது ஆசிரியரை என்றும்**
**நான் நேசிக்கின்றேன்.**

## நான்

எனது பெயர் ஆரணி.
நான் மூன்றாம் தரத்தில் கல்வி கற்கிறேன்.
நான் தினமும் அதிகாலையில் துயில் எழுவேன்.
நான் பாடசாலைப் போட்டியில் சான்றிதழ் பெற்றுள்ளேன்.
நான் ஐந்து வயதில் வெற்றிக்கிண்ணம் பெற்றுள்ளேன்.
எனக்கு படம் வரைவதென்றால் மிகவும் பிடிக்கும்.
நான் மிகவும் வேகமாக ஓடுவேன்.
நான் ஐந்து வயதில் சாக்குப் பாய்தல் மிகவும் நன்றாகப் பாய்வேன்.
நான் கயிறடித்தல் மிகவும் நன்றாக அடிப்பேன்.

# பேர்கன் நகர தொழிலாளர் தினம்! 1.Mai – Bergen






Jan Christian Vestre (AP)
Minister of Health and Care Services

பேர்கன் நகரில் 2026 தொழிலாளர் தினம் பிரகாசமான சூரிய ஒளியிலும், கதகதப்பான வெப்பநிலையிலும் கொண்டாடப்பட்டது.

ஏராளமான மக்கள் நகரின் மையத்தில் ஒன்று கூடினர்.

தொழிற்சங்கங்கள், அரசியற் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து, தொழிலாளர்களின் உரிமைகளை, கோரிக்கைகளை, வேண்டுதல்களை முன்வைத்து மிகவும் நாகரிக-மான முறையில் செங்கொடி ஏந்திய ஊர்வலங்கள் நடாத்தி நகரத்தை வண்ணமயமாக மாற்றினர்.

அதேசமயயம் தற்போது பேர்கனில் உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் பணியாளர்கள் ஏப்ரல் 19ம் நாளிலிருுந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சம்பள உயர்வு, அதிக வேலைப்பழு மற்றும் தொழிலாளர்களின் நோய் விடுப்புக் காலங்களுக்கான தகுந்த ஊதியம் ஆகிய கோரிக்கைகளை முன் வைத்துப் போராட்டம் முன்னெடுக்கப் படுகிறது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள உழைப்பாளர்களின் போராட்டத்துக்கு 2026 மேதினத்தன்று ஊர்வலங்களில் ஈடுபட்ட மக்கள் அதிகளவிலான ஆதரவுக் குரல்கள் கொடுத்ததைக் காண முடிந்தது.

-Julius Antoni-
Alle Foto: Jeron Joseph




1.Mai 2026 - Bergen



F.V: Andreas Bergmann, styremedlem i Fana og Ytrebygda arbeiderpartilag.
Jeron Joseph, nestleder i Fana og Ytrebygda Arbeiderpartilag og bystyremedlem for Arbeiderpartiet i Bergen